1978 மார்ச் 9]

[முற்பகல் 9-10].

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, அந்தக் கட்டடங்களில் பல கீழே இடிந்து விழும் நிலையில் இருப்பதால் அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பழுதுபார்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மொத்தம் 156 கட்டடங்களில் 81 குடியிருப்புகள் ஏற்கனவே செப்பனிடப்பட்டிருக்கின்றன. 75 குடியிருப்புகள் செப்பனிடப் படாமல் இருக்கின்றன. போதிய நிதிவசதி இல்லாததால் செப்பனிடப்பட முடியவில்லை.

மின் வாரியத்தில் உள்ள தற்காலிகப் பணியாளர்கள்.

* 463. வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

மின் வாரியத்தின் கீழ் நிரந்தரமாக்கப்படாத டி.சி. எல். தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் தற்போதுள்ளனர் ? இவர்கள் எப்போது நிரந்தரமாக்கப்படுவர் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 32 பேர் உள்ளனர். மூன்று ஆண்டுகள் பணி முடித்தபின் மேற்கண்ட தினக்கூலி ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படுவது குறித்து கவனிக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, என். எம். ஆர். ஊழியர்களாக எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள், பி.யூ.சி. படித்தவர்கள், பி.ஏ. படித்தவர்கள் உள்பட டைப்பிஸ்டுகளாகவும், கிளார்க்குகளாகவும் பலர் மின் வாரியத்தில் பணியாற்றுவது உண்மையா? அவர்கள் செய்யும் வேலைக்கான பெயரைக் கொடுத்து அந்தப் பெயருக்கும் வேலைக்கும் தகுந்த ஊதியம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது டெம்பரரி கேஷுவல் லேபரர்ஸைப் பொறுத்த கேள்வி. 380 தினக் கூலித் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்று குறிப்பிட்டேன். மூன்றாண்டுப் பணிக்காலம் முடிந்ததும் அவர்கள் ரெகுலர் ஹெல்ப்பர் அல்லது கிளீனராக அப்சார்ப் செய்யப்படுவார்கள்.

திரு. ரா. உமாநாத் : சார், டெம்பரரி கேஷுவல் லேபரர்ஸ் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் செய்யக்கூடிய வேலையின் தன்மை— as per the general Standing Order

கேஷுவல் என்றால் 'work of a casual nature,' டெம்பரரி என்றால் 'work of a temporary nature,'—ஆனால் அங்கே டெம்பரரி கேஷுவல் லேபரர்ஸ் 'work of a permanent nature' செய்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படியானால் அந்த ஓர்க்கில் பர்மனென்ட் செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் படிப்படியாக அவர்களை நிரந்தர மாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 32 பேர்தான் பாக்கியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த தற்காலிக ஊழியர்களுக்கு பல்வேறு வசதிகள் தரப் படுவதில்லை. அவர்களுடைய சம்பள உயர்வுகூட நீண்ட நாட் களாக உயர்த்தப்படவில்லை என்ற குறை இருக்கிறது. அந்தச் சம்பளத்தை உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிரந்தரமாக ஆக்கப்பட்டால் எல்லா வசதிகளும் கிடைக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தொழில் தகராறு சட்டத்தில் கூட 240 நாட்கள் வேலை பார்த்தால் அந்தத் துறையிலே நிரந்தரமாக்க வேண்டு மென்று இருக்கிறது. ஆனால் அரசுத் துறையின் பகுதியாக இயங்கும் மின் வாரியம், கூட்டுறவுத் துறை, போக்குவரத்துக் கழகம் இப்படிப்பட்ட இடங்களில் 240 நாட்கள் கடந்த பின் னாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. மின் வாரியத்தில் வேலை பார்க்கும் பதிலி, அத்துக்கூலி போன்றவர்கள் நிரந்தர மாக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதை பெரிய பிரச்னையாகக் கருத வேண்டியதில்லை. நான் ஏற்கனவே சொன்னபடி 32 பேர்தான் பாக்கியுள்ளனர். 94,000 பேர் பணியாற்றும் இடத் தில் இதுவொன்றும் பெரிய பிரச்னை அல்ல.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள் விக்கு அமைச்சரவர்கள் 32 பேர்தான் கேஷுவல் லேபரர் களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். படித்தவர்கள் செய்யக்கூடிய வேலைக்கு, வேலைக்குத் தகுந்த பெயர், 'work according to designation' அந்த வேலைக்கான சம்பளம் கொடுக்கப்படுமா என்று கேட்டேன். அவர்களை தினக்கூலிகளாக வைத்து வேலைவாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

1978 மார்ச் 9]

அவர்கள் பர்மனென்ட் செய்யப்படுவார்களா என்ற கேள்வி தான் முன் வைக்கப்பட்டது. அப்படி இருப்பது உண்மையா? படித்தவர்களாக இருப்பவர்களேயும் தினக்கூலிகளாக வேலே வாங்கும் நிலேமை இன்றைக்கும் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதை மாற்ற முயற்சிப்பார் களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலேவரவர்களே, தினக்கூலியாக வேலே செய்வது என்பது பாவ காரியம் அல்ல. அது படித்தவர்களானுலும் சரி, படிக்காதவர்களானுலும் சரி, முதலிலே தற்காலிகமாக எடுக்கப்படுகிறுர்கள். அந்த வேலே நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்ற பொழுது அந்தக் குறிப்பிட்ட பணிக்காலம் முடிந்ததும் நிரந்தரமாக்கப்படுகிறுர்கள். இன்னும் சொல்லப்போனுல் மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் வேலேக்காரன் தேவையில்லா திருந்தும்கூட சூப்பர்நியூமரரி போஸ்டுகளில் பலபேர்கள் இருக்கிறுர்கள். அவர்களுக்கு எப்படியாவது வேலே கொடுக்க வேண்டிய கட்டாயம் மின்சார வாரியத்தில் இருக்கிறது.

நெல் கொள்முதல் விலே.

* 464. வினு—திரு. மா. மணிமாறன்:

திரு. துரை கலியமூர்த்தி :

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நெல் விலே அதிகம் கிடைக்க போனஸ், வண்டிச் சத்தம் போன்றவை சேர்த்துக் கொடுத்து வந்ததை குடியரசுத் தலேவர் ஆட்சியில் நிறுத்தியதை மாற்றி மீண்டும் விவசாயிகள் அதனேப் பெறவும், அதிகப்படுத்தவும் அரசு ஏதேனும் நட வடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பொழுது சட்டபூர்வமான கொள்முதல் பெரிய அரைவை ஆலேகளில் மொத்த வணிகர்கள் கணக்கில் உற்பத்தியாகும் அரிசியின் மீது 20 சதவீதம் லெவி விதித்தும் தஞ்சை, தென்ஞற்காடு, வடாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்டு வெளியே எடுத்துப் போகப்படும் நெல்/அரிசி மீதும் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசி மீதும் முறையே 20 சதவீதம் 10 சதவீதம் வீதம் செய்யப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து